# தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

## பழைய மாணவர் சங்கம் - கொழும்புக்கிளை








நிறுவியவர்
பாவலர் திரு.தெ.அ.துரையப்பாபிள்ளை



மகாஜன சிற்பி
திரு.தெ.து.ஜெயரத்தினம்

# வருடாந்த குடும்ப ஒன்றுகூடல் - 2004

# *F. JEEWAJEE & BROTHERS*

**ESTD 1948**

**PAPER MERCHATS. CONVERTORS & OFFSET PRINTERS**

**Authorised Dealers for National Paper Corporation**

**Importers of all Types of Paper & boards**

**Office :**
**No. 50. New Moor Street.**
**Colombo -12.**
**Phone : 2341990 / 91.2432861**
**2342303 / 04. 2440220**
**Fax : 2324085**

**Factory**
**No. 255. Fersuson Road.**
**Colombo -15**
**Phon : 2520300. 2521770**
**2521618, 2527317**
**Fax : 2521606**

## ஒன்றுகூடி
## ஆடிப்பாடி மகிழ்வோம்

தேடுங் கல்வி திசையளக்கத்
        தெளிந்த ஞானத்துரையப்பா
பாடும் புகழில் மகாஜனவின்
        பழைய சிஷ்யர் பரந்திடவே
கூடும் சங்கம் கூட்டினரால்
        குடும்ப ஒன்று கூடலுடன்
நாடும் வீடும் நயம்பெறுமால்
        நல்ல பணிகள் மலிந்திடுமே.

"உன்னை அறிவாய்" உலகறிவாய்
        ஊரும் பேரும் ஒன்றிடவே
முன்னைப் பள்ளி முழுதுணர்வாய்
        மூத்தோர் சொல்லும் அமுதன்றோ!
தென்னை தந்த செயல்போலத்
        தேனாய்க் கல்வி பயனளிக்க
அன்னை குடும்பம் அனைவருமே
        ஆடிப் பாடி மகிழ்வோமே.

பன்மொழிப்புலவர் - த.கனகரத்தினம்
(பழைய மாணாக்கன்)

---

## கல்லூரிக் கீதம்

(ஜன கண மன .................... என்ற மெட்டு)

ஜய ஜய மாஜன ஜயசுப மாதா
ஜய ஜய மாஜன ஜயகே

கல்லூரித் தாபகர் கல்விக் கலைஞன்
துரையப்பா புகழ் துதிப்போம்
மாண்புறு மகனாம் மகாஜன சிற்பி
ஜயரத்தினம் பணி நினைவோம்

வில்லுறு விளக்கு வியன்மறை எழுத்து
விளங்கிடு தாமரை யுடையோம்
உனைநீ அறியென் றுரையை
நினைவுறு தொண்டிற் கண்டு
புனைமல ராகவே பெய்வோம்

வெல்லுக வெல்லுக மாஜன மாதா
வெல்லுக மாஜன தலைவர்
நல்காய் நல்காய் நல்காய்
நல்லறம் பொருளின்பம் நல்காய்
வெல்லுக மாஜன மாதா

புலவர் நா. சிவபாதசுந்தரனார்

# குடும்ப ஒன்றுகூடல்

குடும்பத்தில் பிரிவு இயற்கை. தலைவன் தலைவியர்களிடையே நிகழும் பிரிவு இலக்கியங்களில் விதந்து பேசப்படுமொன்றாகும். பிரிவின் பின் நிகழ்வது இன்பம். தலைவன் தலைவியைவிட்டுப் பிரிவதற்குக் காரணங்களும் உண்டு. (1) பொருள்வயிற்பிரிதல் (2) தூதிற்காகவே பிரிதல் (3) போரிற்காகப் பிரிதல் என்ற காரணங்களுக்காகவே பிரிவு நிகழ்ந்தது. இவை இலக்கியங்கூறும் பிரிவுகள். பிரிவு நிகழ்ந்து அவர்கள் ஒன்று கூடும் இன்பம் அளவற்றது. கற்றோர்கள், புலவர்களிடையே நிகழும் பிரிவு இன்னொருவகையானது. மீண்டும் அவர்கள் ஒன்று கூடும் போது நிகழும் இன்பம் அளவற்றது. எந்த வகைப் பிரிவிலும் பிரிந்தவர் கூடினாற் பேசவும் வேண்டுமோ? என்றனர் புலவர்.

இலங்கையில் நடந்த யுத்தம் காரணமாக ஏற்பட்ட பிரிவுகளோ பலவகையாகும். குடும்பங்கள் பிரிந்தன. தலைவன் தலைவி பிரிந்தனர், உற்றார் உறவினர் அயலவர் பிரிந்தனர். பொதுவில் மக்கள் - தமிழ் மக்கள் புலம் பெயர்ந்தனர். சிலர் நாட்டையே விட்டுப்பிரிந்து பிற நாடுகளில் குடி புகுந்தனர். கல்லூரிகளை விட்டு மாணவர் பிரிந்தனர். இந்த நிலையில் கடந்த இரண்டு வருட காலத்தில் ஏற்பட்ட போர்நிறுத்தமும் சமாதானப் பேச்சுக்களும் மக்களை ஓரளவு ஒன்று சேரச் செய்துள்ளன. பல இழப்புகளிடையே ஏற்பட்ட மகிழ்ச்சி இதுவாகும்.

மகாஜனக் கல்லூரியைப் பொறுத்தஅளவில் கல்லூரியைப் பிரிந்த மாணவர்கள் மீண்டும் ஒன்றுகூடியுள்ளனர். பழைய இடத்தில் மகாஜனக் கல்லூரி நடைபெறச் செய்த பெருமை திரு.சு.ஸ்ரீபாஸ்கரன் அவர்களையே சாரும். அவரது அருந் தொண்டை இன்றும் என்றும் நினைவு கொள்வோமாக.

மகாஜனக் கல்லூரி பழைய மாணாக்கர் கொழும்பிலும், கனடா, இலண்டன், பாரிசு, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலும் புலம் பெயர்ந்தும், தொழில்மேற் பிரிந்தும் வாழ்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்களும் சேர்ந்து பழைய மாணவர் சங்கங்களையும் அமைத்துள்ளன. மகாஜன பெரிய ஓர் ஆலமரம். அது கிளைபரப்பி விழுதுகள் விட்டவாறு பழைய மாணாக்கர் சங்கங்கள் வளர்ந்துள்ளன. இன்று பழைய மாணாக்கர்களது குடும்பங்களும் பல்கிப் பெருகியுள்ளன.

பழைய மாணாக்கர் கூடுவதற்குப் பழைய மாணாக்கர் சங்கங்கள் இடமளித்து வருகின்றன. இப்போது அவர்கள் குடும்பங்களும் ஒன்று கூடுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு குடும்பமும் ஒரு சமுதாயத்தின் முக்கிய அலகு அல்லவா? எனவே குடும்ப ஒன்று கூடலும் அவசியமான தொன்றேயாகும்.

போரினாலோ, கள்வராலோ, பகைவராலோ, தீயினாலோ கவரப்படாத ஒரு பொருள் உண்டாயின் அது கல்வி. அக்கல்விப் பயிரை மகாஜனவில் நாட்டிவைத்தவர் பாவலர் துரையப்பாபிள்ளை. நாம் மாத்திரம்மன்றி குடும்பங்கள் பலவும் ஒன்று கூடி அவரது பணியை நினைவு கூர்வோமாக. அவர் வளர்த்த கல்விப்பயிரை உரமிட்டு, நீர்பாய்ச்சி, காவல் செய்து வளர்த்தவர் அவரது மகன் அதிபர் ஜெயரத்தினம் ஆவர். அவரையும் நினைவு கூர்வோமாக.

இவர்களை நினைவு கூர்வதற்காவும் மகாஜனக் குடும்பங்களிடையே ஒரு பிணைப்பை உண்டாக்குவதற்காகவும் ஆண்டில் ஒரு நாளாவது ஒன்று கூடுவோமாக.

கூடி ஆடிமகிழ்வோம், கூடிப்பாடிப் பயில்வோம்.
மகாஜனவின் பண்பாட்டைப் பேணுவோம்.
கல்விச் செல்வத்தைக் கண்போற் காப்போம்.

யா/மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை
J/Mahajana College, Tellippalai

Principal :
**Mr. P. Suntharalingam**, B.Sc. (Cey), Dip-in-Ed. (Cey)
Deputy Principal :
**Mr. S. Rajakulendiran**, B.A (Cey), Dip-in-Ed. (Cey)


18.03.2004

# அதிபரின் வாழ்த்துச் செய்தி

எமது கல்லூரியின் பழைய மாணவர்கள் இலங்கையிலும் உலகின் பல நாடுகளிலும் அரச, தனியார் நிறுவனங்களில் உயர் பதவி வகிப்பதுடன் நற்பிரசைகளாக வாழ்ந்து கல்லூரிக்கும் நாட்டிற்கும் புகழ் தேடித் தருகிறார்கள். இவர்கள் தாம் வாழும் நாடுகளில் பழைய மாணவர் சங்கங்கள் அமைத்து அவற்றைத் திறம்பட நிர்வகித்து அதனூடாக பாடசாலையின் வளர்ச்சிக்கு பல வழிகளிலும் உதவி வருகிறார்கள். ஒரு சில பழைய மாணவர் தனிப்பட்ட முறையிலும் உதவி வருகிறார்கள். கடந்த சில வருடங்களாக குடும்ப ஒன்று கூடலை நடாத்துவதன் மூலம் குடும்பங்களிடையே இணைப்பையும், நல்லுறவையும், பாடசாலைப்பற்றையும் ஏற்படுத்தி வருகிறார்கள். அத்துடன் இக்குடும்ப ஒன்றுகூடல் மூலம் தங்கள் பிள்ளைகள் எமது கல்லூரியின் பெருமைகளையும் அறியக்கூடிய சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்தி இப்பாடசாலைக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தையும் ஊட்டுகிறார்கள். எமது கல்லூரிக்கு பல வழிகளிலும் உதவி வரும் கொழும்பு பழைய மாணவர் சங்கம் 18.04.2004 குடும்ப ஒன்றுகூடலை நடாத்துவதையிட்டு பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இவ்வொன்று கூடலுக்கு நாட்டின் பல பாகங்களிலும் உள்ள பழைய மாணவர்கள் குடும்பத்துடன் கலந்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதுடன், இவ்வொன்று கூடல் நிகழ்வு சிறப்புற நடைபெற வாழ்த்துகிறேன்

பொ.சுந்தரலிங்கம்
அதிபர்
யா/மகாஜனக்கல்லூரி
தெல்லிப்பழை

*With Best compliments*

*from*

# Leela Press (Pvt) Ltd.

**Printers, Publishers & Calendar diary Manufacturers**

*"SinnaduRai Building"*
*182, Messenger Street,*
*Colombo -12.*
*Tel : 2325930, 2334332*
*Fax : 2334332*

# தலைவரின் செய்தி

எமது சங்கம் இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன் 22.08.1953 அன்று ஸ்தாபிக்கப்பட்டது. 1983 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக, எமது கிளை அங்கத்தவர் பலர் கொழும்பைவிட்டு யாழ்ப்பாணத்திற்கும், வெளிநாடுகளிற்கும் புகலிடம் தேடிச் செல்லும் நிலை ஏற்பட்டு இருந்தது. இதன் காரணமாக எமது சங்கம் செயல் இழந்தது அனைவரும் அறிந்ததே.

எனினும் எமது கல்லூரியின்பால் ஆர்வமுள்ள பலபேர் மீண்டும் 03.07.1994இல் ஒன்றுகூடி சங்கத்தை மீளக் கட்டி எழுப்பினார்கள். இவர்களது செயற் திறனால் தான் நாம் இன்று ஒன்று கூடுகின்ற அரிய சந்தர்ப்பத்தை பெற்றிருக்கின்றோம். ஐந்து ஆண்டுகளுக்கு முன் 25.04.1999 அன்று முதன் முதலாக இவ்வாறான ஓர் ஒன்றுகூடலை ஏற்படுத்திய பொழுது சுமார் 250 பேர் கலந்து எம்மை உற்சாகப்படுத்தினீர்கள்.

எமது கல்லூரி மீண்டும் அம்பனையில் 15.09.1999 அன்று சொந்த இடத்திற்கு வந்து கம்பீரத்துடன் செயலாற்றி வருவது எமக்கு பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கின்றது. எனினும் பாடசாலைச் சூழலில் மக்கள் மீளக்குடியமர அனுமதியில்லாமல் இருப்பது பலதரப்பட்ட பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு பாடசாலை முகம் கொடுக்க வேண்டி இருக்கின்றது. இந்தக் இக்கட்டான நேரத்தில் எமது ஒத்துழைப்பும், அக்கறையும், உதவிகளும் அவர்களை உற்சாகப்படுத்தி, மீண்டும் பொற்காலத்தை நோக்கி அவர்கள் முன்னேற ஒரு உறுதியான மனத்திறனை ஏற்படுத்தும் என எண்ணுகின்றோம்.

எமது பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள் 19.04.2003 அன்று கொழும்பில் கூடிய போது, கல்லூரி அதிபர், ஆசிரியர்களையும் சந்தித்து அவர்களது தேவைகளை அடையாளம் கண்டு கல்லூரிக்கான பல வகையான கருத்திட்டங்களை வடிவமைத்தது. இந்தத் திட்டங்கள் சில எமது பழைய மாணவர்களாலும், பழைய மாணவர் சங்கங்களினாலும், அரசசார்பற்ற நிறுவனங்களினாலும், கல்வித் திணைக்களத்தினாலும் செய்து முடிக்கப்பட்டதனை பலர் கண்டும், அறிந்தும் இருப்பீர்கள். எனினும் இன்னும் பல தேவைகளும், பாரிய திட்டங்களும் அமுலாக்கப்பட வேண்டிய கால கட்டத்தில் இருக்கின்றோம். வெளிநாடுகளில் இருக்கும் எமது பழைய மாணவர்கள் அடையாளம் காணப்பட்ட கருத்திட்டங்களுக்கு நிதி உதவி செய்வதற்கு மனமுவந்து முன் வந்திருக்கின்றார்கள். நாமும் அவர்களுக்கு இத்தருணத்தில் அந்தத் திட்டங்களைச் செய்து முடிப்பதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும். அவர்களது உதவிகளுக்கு எமது நன்றியுணர்வைக் காட்டவும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இன்றைய தினம் வருகைதந்திருக்கும் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், மற்றும் அவர்களின் குடும்பத்தினரையும் அன்புடன் வரவேற்று, ஒரு மகிழ்ச்சிகரமான சூழ்நிலையை ஏற்படுத்த உதவி செய்த அனைவருக்கும் எங்கள் நிர்வாக சபையின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"கல்விக்கோர் கலங்கரை விளக்கம் - மகாஜனா"



இ.கிருபானந்தன்
தலைவர்

*With Best compliments*
*from*

# RAMKA ASSOCIATES

**G.L.G.I. DIAS PLACE,**
**GOONESINGHPURA,**
**COLOMBO -12**

## பிரதம அதிதி பேராசிரியர் எம். சின்னத்தம்பி அவர்களின் வாழ்த்துரை

அமரர் துரையப்பாபிள்ளை அவர்களின் தொலை நோக்காலும், இந்துமதப் பின்னணியைக் கொண்டதொரு கல்லூரியை நிறுவவேண்டுமென்ற திடசங்கற்பத்தினாலும் உருவாகிய தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி பின்னர் அவரது தனயன் அமரர். ஜெயரட்னம் அவர்களின் சிறந்த ஆளுமையாலும் கடும் உழைப்பாலும் வளர்ச்சியடைந்து யாழ்ப்பாண தீபகற்பத்தின் முன்னணி பாடசாலைகளில் ஒன்றாக உயர்ந்தது. அந்தக் காலப்பகுதியில் தான் மலையகத்திலிருந்து அங்கு சென்று கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பிலே கல்விபயிலும் அரிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது. யாழ்ப்பாணக்கல்லூரியிலும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் எனக்கு அனுமதி கிடைத்தபோதும், கல்லூரி அனுமதியுடன் வதிவிட வசதியும் கிடைத்தமையால் நான் மகாஜனக்கல்லூரிக்குச் சென்றேன். சுமார் ஒன்றரை வருட காலம் மட்டுமே அங்கு கல்வி பயின்றாலும், பிற்காலத்தில் நான் அடைந்த வெற்றிகளுக்கு அதுவே அடித்தளமிட்டதென்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

அறுபதுகளின் பிற்பகுதியிலும், எழுபதுகளின் முற்பகுதியிலும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே பயின்று வந்த மகாஜனக்கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் வருடா வருடம் ஒன்று கூடுவது வழமையாக இருந்தது. பின்னர் அது பல்வேறு காரணங்களால் கைவிடப்பட்டது அல்லது அதில் பங்குபெறும் வாய்ப்பு எனக்கு இல்லாமல் போயிற்று. இவ்வருடம் கொழும்பிலே நடைபெறும் மகாஜனக்கல்லூரி பழைய மாணவர்களின் வருடாந்த ஒன்ற கூடலில் என்னை பிரதம விருந்தினராக அழைத்தமைக்காக அதற்கு காரணகர்த்தாக்களாக இருந்தவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன.

நான் கல்லூரியில் பயின்ற காலத்தில் கணித ஆசிரியராக இருந்த திரு முருகையா ஆசிரியர் அவர்கள் வீடுதேடி வந்து நேரடியாகவே இது தொடர்பான அழைப்பை விடுத்தமையை எண்ணி நான் பெருமைப்படுகின்றேன். அவருக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

இனக்கலவரங்களின் பின்னணியில் கனடாவுக்குச் சென்று தனது குடும்பத்தாருடன் அங்கு வாழ்ந்து வரும் எனது குடியியல் ஆசிரியர் கார்த்திகேசு மாஸ்டர் அவர்கள் பல வருடங்கள் உருண்டோடிய பின்னரும் என்னை நினைவு கூர்ந்து ஒரு நீண்ட கடிதத்தை அண்மையில் அனுப்பியுள்ளார். B.B.C தமிழோசை நிகழ்ச்சிக்கு இவ்வருட வரவு செலவுத்திட்டம்பற்றி நான் அளித்த பேட்டியை செவிமடுத்து என்னைப் பாராட்டி இக்கடிதத்தை எழுதியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. அவருக்கு இப்பொழுது வயது 75. தள்ளாத வயதிலும் தனது சொந்தக் கையால் இக்கடிதத்தை எழுதியுள்ளமை என் அடிமனதைத் தொட்டுவிட்டது.

என் அறிவிற்கு உரமூட்டி வாழ்க்கையிலே என்னை உயர்த்தி விடட மகாஜனக் கல்லூரிக்கும், ஆசிரியர்களுக்கும் என்றென்றும் நான் கடமைப்பட்டுள்ளேன்.

பழைய மாணவர் சங்கத்தினது கொழும்புக்கிளையின் இவ்வருட ஒன்றுகூடல் சிறப்பாக அமைய எனது உள்ளங்கனிந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க மகாஜனக் கல்லூரி, வளர்க அதன் சேவைகள்.

## எமது கடந்த காலம்...

**03 ஜுலை, 1994 - சங்கம் மீளமைப்பு**

எமது சங்கம் 22.08.1953இல் ஸ்தாபிக்கப்பட்டது. எனினும் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவித நிகழ்வுகளினால் 1983ஆம் ஆண்டு தொடக்கம் செயல் இழந்தது.

திரு.P. பாலசிங்கம் அவர்கள் பல ஆர்வமுள்ள பழைய மாணவர்களின் ஒத்துழைப்புடன் கொழும்பு இந்துக்கல்லூரியில் பழைய மாணவர்களை ஒன்று கூட்டி மீண்டும் சங்கத்தை மீளமைத்தார். அன்று தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபையின் தலைவராக திரு.சி.சிவபாஸ்கரன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.

**26 நவம்பர், 1994 - ஐக்கிய இராச்சியக் கிளை செயலாளருக்குத் தேநீர் விருந்து**



இலண்டன் கிளை செயலாளர் திரு.நா.சிறீகெங்காதரன் இலங்கைக்கு வந்த போது எமது நிர்வாக சபை கூட்டத்துக்கு வருகை தந்தார். அவரைக் கௌரவிக்குமுகமாகவும் எங்கள் கிளைச் சங்கங்கள் எவ்வாறு கல்லூரிக்கு உதவலாம் என்பது பற்றிக் கலந்துரையாடுவதற்கும் தேநீர் விருந்து ஒன்றுதிரு.P.பாலசிங்கம் அவர்கள் இல்லத்தில் அளிக்கப்ட்டது.

**22 ஏப்ரல், 1995 - கல்லூரி அதிபருக்கு இராப்போசன விருந்து**

அதிபர் திரு.க.நாகராசா அவர்கள் ஒன்றுகூடலில் கலந்து கொள்ளக் கொழும்பு வந்த சமயம் அவர்களுடன் கல்லூரி அபிவிருத்தி பற்றி கலந்துரையாடவும் அவரை கௌரவிக்கு முகமாகவும் ஓர் இராப்போசன விருந்து திரு.P.பாலசிங்கம் அவர்கள் இல்லத்தில் நிர்வாக சபையினரால் அளிக்கப்பட்டது.

**23 ஏப்ரல், 1995 - ஒன்று கூடல்**

சங்கத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு பம்பலப்பிட்டி தொடர்மாடி சனசமூக நிலைய மண்டபத்தில் முன்னாள் உப அதிபர் திரு.K.கிருஷ்ணபிள்ளை, திருமதி.S.கிருஷ்ணபிள்ளை அவர்களைப் பிரதம விருந்தினராக அழைத்து சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கொழும்பில் தங்கியிருந்த முன்னர் மகாஜனக் கல்லூரியில் சேவையாற்றிய 22 ஆசிரியர்கள் ஒன்று கூடல் வைபவத்திற்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

கல்லூரி அதிபர் திரு.க.நாகராசா, தெல்லிப்பழை பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் திரு.செ.சிவபாலன், திருமதி.க.செல்வராசா ஆகியோரும் இவ்வொன்று கூடலில் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.

இவ்வொன்று கூடலில் வைத்தியகலாநிதி.V.அருளானந்தராஜா, திரு.தேசபந்து சின்னத்துரை, திரு.P.பாலசிங்கம் ஆகியோர்களினால் அன்பளிக்கப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் கல்லூரி அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

**29 ஜுலை, 1995 - திரு.P.பாலசிங்கம் அவர்களின் பாராட்டு விழா**


நிர்வாக சபை உறுப்பினர் திரு.P.பாலசிங்கம் அவர்கள் லயன்ஸ் கழகம் கொழும்பு மாவட்டத் (Lions Club of Colombo Circle) தலைவராகத் தெரிவு செய்யப்பட்டமையிட்டு அவரைக் கௌரவிக்குமுகமாக தலைவர் திரு.சி.சிவபாஸ்கரன் அவர்களின் இல்லத்தில் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

12 ஆகஸ்ட், 1995 - முதலாவது ஆண்டுப் பொதுக் கூட்டம்



இந்த ஆண்டுப் பொதுக்கூட்டம் வெள்ளவத்தை "தியோசொபிகல் சொசைட்டி" (Thesophioal Society) மண்டபத்தில் நடைபெற்றது.

04 பெப்ரவரி, 1996 - வகீபிபாபமாசம் அங்கத்துவம்




கொழும்பில் இயங்கிவரும் வட-கீழ் மாகாணங்களிலுள்ள பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள் ஒரு அமைப்பை ஏற்படுத்தி "வட-கீழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனம்" (வகீபிபாபமாசம்) எனப் பெயரிட்டது. இச்சம்மேளனத்தின் தாபக உறுப்பினராக எமது கிளையும் இணைந்து கொண்டது. இச்சம்மேளனம் வட-கீழ் மாகாணங்களிலுள்ள பாடசாலைகளின் கல்வி பாதிப் படைவதைத் தடுத்து அங்கு கல்வி தொடர வேண்டும் என்ற முக்கிய நோக்கத்துடன் ஆரம்பிக்கபட்டது.

29 ஜுன், 1997 - மூன்றாவது ஆண்டுப் பொதுக் கூட்டம்

நாட்டின் சூழ்நிலை காரணமாக இரண்டாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் நடாத்தப்படவில்லை. மூன்றாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெற்றது. இக்கூட்டத்தில் 53 பேர் கலந்து கொண்டனர்.


27 ஜுன், 1998 - நான்காவது ஆண்டுப் பொதுக் கூட்டமும் ஒன்று கூடலும்



இப்பொதுக்கூட்டம் பம்பலப்பிட்டி, அரச தொடர்மாடிக் கட்டிட சனசமூக நிலைய மண்டபத்தில் இடம் பெற்றது. இக்கூட்டத்தில் 45 அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தைத் தொடர்ந்து ஒன்றுகூடல் விழா இடம் பெற்றது. கல்லூரியின் பழைய மாணவர் பேராசிரியர் சோ.சந்திரசேகரனும், அவரது பாரியாரும் பிரதம விருந்தினர்களாக கலந்து விழாவைச் சிறப்பித்தனர்.


13 ஆகஸ்ட், 1998 - தேநீர் விருந்து திருமதி.இராணி ஜெயரத்தினம்

கல்லூரிச் சிற்பி அமரர் திரு. தெ. து. ஜெயரத்தினம் அவர்களது பாரியார் திருமதி.ஜெயரத்தினம் இலங்கை வந்திருந்த சமயம் அவரையும், அவர்களது மூத்த புதல்வி திருமதி.பவானி விக்கினேஸ்வரன் அவர்களையும் கௌரவிக்கும் முகமாக ஹெவலொக் டவுன் மதுரா வூட்லன்ட்ஸ் உணவகத்தில் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. இந்தச் சமயம் இலங்கை வந்திருந்த லண்டன் கிளையின் பொருளாளர் திரு.மு.ஜெயவரதன், ஐக்கிய அரபு இராச்சியத்தில் வதியும் ஆயுள் அங்கத்தவர்



திரு.T.தர்மச்சந்திரர் குடும்பத்தினரும் கலந்து கொண்டது சிறப்பம்சமாக இருந்தது. இந்த விருந்தில் செயற்குழு அங்கத்தினர்கள் குடும்பங்களுடன் கலந்து கொண்டனர்.

06 டிசெம்பர், 1998 - நினைவாஞ்சலி விழா அமரர் திரு.அ.செ.முருகானந்தன்



அளவெட்டியைப் பிறப்பிடமாகக.கொண்ட திரு.அ.செ.முருகானந்தன் அவர்கள் எமது கல்லூரிக்குப் புகழைத் தேடித்தந்தவர் வரிசையில் ஒரு முன்னோடியாகக் கருதப்படுபவர். இவர் தனது இறுதிக்காலத்தை திருகோணமலை திருச்சிலுவைக் கன்னியர் மடத்தில் கழித்துக் கொண்டு இருக்கையில் 28.10.1998 அன்று காலமானார். ஈழத்து இலக்கிய மறுமலர்ச்சியின் மும்மணிகளாகக் கருதப்படுகின்ற திரு.அ.செ.முருகானந்தன், திரு.அ.ந.கந்தசாமி, திரு.மஹா கவி ஆகிய மூவரும் எமது கல்லூரியின் பழைய மாணவர்கள் ஆவார்கள். திரு.அ.செ.முருகாந்தன் அவர்களது படைப்புக்கள் ஈழகேசரி, வீரகேசரி பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்தன. அத்துடன் இலங்கை ஒளிபரப்புக்கூட்டுத் தாபன நிகழ்ச்சிகளிலும் ஒளிபரப்பப்பட்டன. இவரது படைப்புக்களில் ஒன்றான "மனித மாடு" இன்றும் பிரபல்யம் வாய்ந்த ஒரு சிறுகதையாக கருதப்படுகின்றது.

திரு.அ.செ.முருகானந்தன் அவர்களின் மறைவை முன்னிட்டு ஒரு நினைவஞ்சலி விழா கொழும்புத் தமிழ்ச் சங்கப் புதிய மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இவ்விழாவில் பின்வரும் கல்விமான்கள் உரை நிகழ்த்தினார்கள்.

1. திருவாட்டி கோகிலா மகேந்திராஜா - அதிபர், தெல்லிப்பழை சைவப்பிராகச வித்தியாசாலை
2. திரு.வ.இராசையா - ஆசிரியர், தகவம்
3. கலாநிதி. நா. சண்முகலிங்கன் - யாழ் பல்கலைக்கழகம்
4. கவிஞர் சு. வில்வரத்தினம் - திருகோணமலை
5. பன்மொழிப்புலவர் திரு.த.கனகரத்தினம்

25 ஏப்ரல் 1999 - வருடாந்த ஒன்றுகூடல்

செயலாளர் திரு.இ.கிருபானந்தனின் ஆர்வத்தினால் எமது கிளை முதன்முறையாக ஒன்றுகூடல் விழாவிற்கு பழைய மாணவர்களின் குடும்பத்தினரையும் அழைத்து வெகு விமரிசையாகக் கொண்டாடியது. இந்த ஒன்றுகூடல் பம்பலப்பிட்டி, கொழும்பு இந்துக் கல்லூரியில் காலை 9:00 மணி தொடக்கம் மாலை 6:00 மணி வரை மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. இந்த வைபவத்திற்கு 225 பேரளவில் வருகை தந்து சிறப்பித்தார்கள். எமது பழைய மாணவர்கள் வைத்திய கலாநிதி. N. கணேசானந்தன், கலாநிதி வே. கணேசலிங்கம் ஆகியோர் பிரதம அதிதியாகவும், சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர். அன்றைய தினம் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.



- கிரிக்கெட்
- கயிறு இழுத்தல் (ஆண்கள், பெண்கள்)
- புல்லாங்குழல் இசை
- பாட்டுச் கச்சேரி
- விநோத உடைப் போட்டி(Fancy Dress)
- பந்தெறிதல் (பெண்கள்)
- தடையோட்டம் (சிறுவர்)
- யானைக்கு கண் வைத்தல் (சிறுவர்)
- பாதணி தேடல் (பெண்கள்)
- மாயாஜால வித்தை (Magic Show)

போட்டியில் திறமைகளை வெளியிட்டவர்களுக்கும், சிறுவர்களுக்கும் கைநிறையப் பரிசுகள் கொடுக்கப்பட்டன. அன்று அதிர்ஷ்ட லாபக் குலுக்கலும் இடம் பெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஒரு மலரும் வெளியிடப்பட்டது.

01 ஜூன், 1999 - நிறுவியவர் நினைவு விழா சிறப்புப் பரிசுகள்

கல்லூரியின் தாபகர் தினமான யூன் மாதம் 24ம் திகதி பல துறைகளில் சிறந்து விளங்கும் மாணவர் கௌரவிக்கப்படுவது அவர்களுக்கு ஊக்கத்தைக் கொடுக்கின்றது. எமது கிளை க.பொ.த.(உ/த) பரீட்சையில் கூடிய புள்ளிகள் பெறும் நான்கு மாணவர்களுக்குக் சிறப்புப் பரிசில் வழங்கிக் கௌரவிக்க ஆரம்பித்தது. கீழ்க்கண்ட பீடத்தைச் சேர்ந்த நான்கு மாணவர்களுக்கு வருடாந்தம் பணப்பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றது.




1. விஞ்ஞானம்
2. கணிதம்
3. கலை
4. வர்த்தகம்

12 ஜூலை, 1999 - கல்லூரி மாணவர்களுக்கு இராப் போசன விருந்து

திருகோணமலையில் ஜூலை 7, 8 ஆம் திகதிகளில் வடக்கு கிழக்கு மாகாணமட்டத்திலான விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவதற்காக 7 மாணவர்களும் ஒரு ஆசிரியரும் கொழும்பினூடாகப் பிரயாணம் செய்தனர். இவர்கள் போட்டி முடிவடைந்து கொழும்பு திரும்பியதும் அவர்களைக் கௌரவிக்குமுகமாக பம்பலப்பிட்டி, சைனீஸ் டிரெகன் (Chinese Dragon) உணவகத்தில், செயற்குழு அங்கத்தினர்களால் ஒரு இராப்போசன விருந்து கொடுக்கப்பட்டது. அத்துடன் காலை மதிய இரவுப் போசனங்களும் பல பழைய மாணவர்களால் தனிப்பட்ட முறையில் வழங்கப்பட்டது.

15 ஜூலை, 1999 - விளையாட்டு உபகரணங்கள், நூல்கள்

ஐந்து வருடகாலமாக கொழும்பில் தேங்கிக்கிடந்த விளையாட்டு உபகரணங்கள், நூலகப்புத்தகங்கள் ஆகியன தரைப்படையினூடாக கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டன. விளையாட்டு உபகரணங்கள் எமது பழைய மாணவர்கள் திருவாளர்கள் P.பாலசிங்கம், தேசபந்து சின்னத்துரை, வைத்தியகலாநிதி V. அருளானந்தராஜா ஆகியோரால் 23.04.1995 அன்று இடம் பெற்ற ஒன்றுகூடல் விழாவிலே கிடைக்கப்பெற்ற அன்பளிப்புக்கள். நூல்கள் திரு.K.சண்முகலிங்கம் அவர்களின் முயற்சியால் இந்துக் கலாசாரத் திணைக்களத்திடமிருந்து கிடைக்கப்பெற்றன. அத்துடன் இன்னுமொரு தொகுதி நூல்கள் (Asia Foundation) நிறுவனத்தினரின் அன்பளிப்புகள் ஆகும். இத்துடன் எமது பாரிஸ் கிளையினர் அனுப்பியிருந்த பாண்ட் வாத்திய சீருடைக்கான துணிகளும் அனுப்பி வைக்கப்பட்டன.






22 ஆகஸ்ட், 1999 - ஐந்தாவது ஆண்டுப் பொதுக் கூட்டம்

இந்தக் கூட்டம் பம்பலப்பிட்டி, கொழும்பு இந்துக் கல்லூரியில் இடம் பெற்றது. இந்தக் கூட்டத்திற்கு 36 அங்கத்தவர்கள் சமூகமளித்திருந்தார்கள்.

**15 செப்டம்பர், 1999 கல்லூரி மீள் குடியேற்றம்**



எமது கல்லூரி மீண்டும் அம்பனைக்குச் சென்றது எமக்கு பெருமிதத்தைத் தந்தது. இதற்கு முக்கிய காரணமாக இருந்த எமது பழைய மாணவரும், ஆசிரியருமான திரு.ஸ்ரீபாஸ்கரன் அவர்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

கல்லூரி, அதன் சுற்றுப்புறம், குடிநீர்க் கிணறு ஆகியனவற்றை வலி-வடக்குப் பிரதேச சபை ஊளியர்களூடாக சுத்திகரிப்பு செய்வதற்கான செலவான ரூபா 8,376/- ஐ எமது சங்கம் பொறுப்பேற்று மாணவர்களின் உடனடிப் பாவனைக்கு ஏற்பாடுகள் செய்து கொடுத்தோம்.

**27 ஜனவரி, 2000 - பொன் விழா ஜம்போரி - பாரத சாரணர் இயக்கம், தெற்கு இந்தியா**

எமது கல்லூரியின் மாணவன் செல்வன் சிவபாலன் செந்தில்ராஜன் சென்னையில் 27.01.2000 தொடக்கம் 01.02.2000 வரை நடைபெற்ற பொன் விழா ஜம்போரியில் கலந்து கொண்டார். இவரது இந்தப் பயணத்திற்குத் தேவையான செலவீனங்களை எமது கனடாக் கிளையினிடம் இருந்து பெற்றுக் கொடுத்து உதவினோம்.

**26 மார்ச், 2000 - வைத்தியகலாநிதி V. அருளானந்தராஜா அவர்களின் கௌரவ விருந்து**



இலங்கையில் முதன்முறையாக பரிசோதனைக் குழாய் மகப்பேற்று முயற்சியில் வெற்றியை எய்திய வைத்தியகலாநிதி அருளானந்தராஜா எமது கல்லூரியின் ஒரு பழைய மாணவர். இவரது முயற்சி இலங்கையின் சரித்திரத்தில் இடம் பெற்றுவிட்டது. இது எமது கல்லூரிக்கு கீர்த்தியையும், இலங்கை வாழ் மக்கள் அனைவருக்கும் ஒரு வரப்பிரசாதமாகவும் அமைந்துள்ளது. இவரைக் கௌரவிக்கும் முகமாக நாம் கொள்ளுப்பிட்டி, ரேணுகா ஹோட்டலில் ஒரு இராப்போசன விருந்து உபசாரம் நடாத்தினோம்.

**24 ஜூன், 2000 - ஆறாவது ஆண்டுப் பொதுக் கூட்டம்**

வெள்ளவத்தை, "தியோசொபிகல் சொசைட்டி" (Theosophical Society), மண்டபத்தில் இடம் பெற்ற இந்தக் கூட்டத்திற்கு 28 அங்கத்தினர்கள் வருகை தந்திருந்தனர்.

**29 ஒக்டோபர், 2000 - அமரர் திரு.தெ.து.ஜெயரத்தினம் நினைவு நாள்**

எமது கல்லூரிச் சிற்பியின் நினைவு தினம் கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெற்றது. கல்லூரியின் பழைய மாணவர்களான பேராசிரியர் திரு.சோ.சந்திரசேகரன், திரு.க.நாகேஸ்வரன், திரு.ஆ.சிவநேசச்செல்வன் ஆகியோர் உரையாற்றினார்கள். புலவர் திரு.த.கனகரத்தினம் அவர்கள் நன்றியுரை கூறினார்கள்.

10 ஜனவரி, 2001 - கல்லூரித் தளபாடங்கள் அன்பளிப்பு




கல்லூரி வகுப்பறைகளுக்கு மேசை கதிரைகள் தேவையென அதிபரின் வேண்டுகோள் கிடைக்கப்பெற்றது. எமது முயற்சியினால் கனடாக் கிளையினர் இவற்றிற்கான நிதி உதவி செய்தனர்.

27 பெப்ரவரி, 2001 - ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசு



2001 ஆம் ஆண்டில் இடம் பெற்ற இந்தப் புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் ஆறாவது இடத்தைப் பெற்ற எமது கல்லூரி மாணவன் செல்வன் நீதுராஜன் பாலசுப்பிரமணியத்தைக் கௌரவிக்குமாறு ரூபா. 2000/- அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

02 மே, 2001 - விளையாட்டு உபகரணங்கள், ஒலிபெருக்கி உபகரணங்கள் அன்பளிப்பு



எமது கல்லூரிக் கிரிக்கெட் அணியினருக்குத் தேவையான விளையட்டு உபகரணங்களும், உதைப்பந்தாட்ட அணியினருக்குத் தேவையான சீருடைகள், ஒலி பெருக்கி உபகரணங்கள் ஆகியன எமது ஐக்கிய இராச்சியக் கிளையினரின் அனுசரனையுடன் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

24 ஜுன் 2001 - ஏழாவது ஆண்டுப் பொதுக் கூட்டம்

எமது சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் இடம் பெற்றது. இந்தக் கூட்டத்திற்கு 33 போர் சமுகமளித்திருந்தனர்.


25 நவம்பர், 2001 - வகீபிபாபமாசம் தளபாடங்கள் அன்பளிப்பு


கொழும்பில் இயங்குகின்ற வட-கீழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனம் எமது கல்லூரி வகுப்பறைகளுக்குத் தேவையான கதிரை, மேசைகள் செய்வதற்கு ரூபா 34,000/- நிதி உதவி செய்தது.

24 ஜுன், 2002 - எட்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டம்

இந்த ஆண்டுப் பொதுக் கூட்டம் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் நினைவு தினத்தன்று கொழும்பு உருத்திரா மாவத்தையில் அமைந்துள்ள தமிழ்சங்க வினோதன் கருந்தரங்கு மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு 33 அங்கத்தினர்கள் வருகை தந்திருந்தனர்.பொதுக்கூட்டத்தின் இறுதிக்கட்டமாக திரு.க.சு.நடராஜன் அவர்கள் நிறுவியவர் நினைவுப் பேருரை நிகழ்த்தினார்.


27 ஆகஸ்ட், 2002 - தேநீர் விருந்து திருமதி.இராணி ஜெயரத்தினம்





எமது கல்லூரிச் சிற்பி அமரர்.தெ.து.ஜெயரத்தினம் அவர்களின் பாரியார் இலங்கை வந்திருந்த சமயம் அவரைக் கௌரவிக்கும் முகமாக "வெஸ்டேர்ன்" ஹோட்டலில் ஓர் தேநீர் விருந்துபசாரம் செயற்குழு அங்கத்தினர்களால் வழங்கப்பட்டது. அவர்களுடன் குடும்ப அங்கத்தினர்கள் திருமதி. பவானி விக்னேஸ்வரன், திருமதி.பாமா மகேஸ்வரன், கணவர் வைத்தியகலாநிதி மகேஸ்வரனுடன் இந்த விருந்துபசாரத்தில் கலந்து சிறப்பித்தார்கள்.அத்துடன் கால்ப்பந்தாட்டத் துறையில் கல்லூரிக்கு புகழ் தேடித்தந்த திரு.க.மோகன்ராம் (அபுதாபி), திரு.P.இராஜகாந்தன் (பாரிஸ்), திரு.அன்டன் கெய்ஸர் (கொழும்பு) மூவரும் அன்றைய வைபத்திற்கு வருகை தந்தமை ஒரு சிறப்பம்சமாக அமைந்தது.

02 செப்டம்பர், 2002 அகில இலங்கை கல்லூரிகளுக் கிடையிலான சதுரங்கப் போட்டி



கல்லூரியில் இருந்து இரண்டு ஆசிரியர்களும் முப்பது மாணவர்களும் கொழும்பு இசிப்பத்தானக் கல்லூரியில் இடம் பெற்ற சதுரங்கப் போட்டியில் கலந்து கொள்ள வந்திருந்தனர். இவர்களைக் கௌரவிக்கும் முகமாக பம்பலப்பிட்டி "சைனீஸ் டிரகன்" உணவகத்தில் இராப்போசன விருந்து ஒன்று கொடுக்கப்பட்டது.
இந்த விருத்திற்கான செலவீனங்களை திருவாளர்கள் இ.கிருபானந்தன், சி.ஶ்ரீலஜெயன் ஆகியோர் பொறுப்பேற்றிருந்தனர்.

15 செப்டம்பர் 2002 மருத்துவ முகாம்

எமது சங்கம் வெள்ளவத்தை, உருத்திரா மாவத்தையில் அமைந்துள்ள தமிழ்ச் சங்கத்தில் வெள்ளவத்தை "மெடி கிளினிக்" நிறுவனத்தின் அனுசரனையுடன் ஒரு மருத்துவ முகாமை முதன் முறையாக ஒழுங்கு செய்திருந்தது. இந்த நிகழ்ச்சி "சலரோக நோய் தொடர்பான இரத்தப் பரிசோதனையும் பராமரிப்புத் தொடர்பான கலந்துரையாடலும்" என்ற விடயத்தை மையமாகக் கொண்டிருந்தது. பின்வரும் நிகழ்வுகள் இடம்பெற்றன.



- வைத்திய கலாநிதி சிறீ சண்முகநாதன் அவர்கள் இரத்தப்பரிசோதனை, இரத்த அமுக்கம் ஆகியவற்றை மேற்கொண்டார்.
- வைத்திய கலாநிதி. ரஞ்சித் அவர்கள் சலரோக நோய்ப் பராமரிப்பு தொடர்பாக உரையாற்றினார்.
- சுகாதாரக் கல்வி ஆலோசகர் திரு.கா.வைத்தீஸ்வரன் அவர்கள் நோயாளர் பராமரிப்பில் உணவின் பங்கு பற்றி உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சிக்கு 75 பேர்வரையில் பங்கு பற்றினர். இந்த நிகழ்விற்கான செலவினை இணைச் செயளாலர் திரு.சி.ஶ்ரீலஜெயன் பொறுப்பேற்றுக் கொண்டார்.

17 நவம்பர், 2002 - கல்லூரிச் சிற்பி திரு.தெ.து.ஜெயரத்தினம் நினைவு **தினம்**

இந்த நிகழ்வு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் கருத்தரங்கு மண்டபத்தில் இடம் பெற்றது. இவ் விழாவின் சிறப்பு விருந்தினராக எமது பழைய மாணவரும், வட-கிழக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயளாலர் திரு.க. சண்முகலிங்கம் அவர்கள் கலந்து சிறப்பித்தார். பின்வரும் பழைய மாணவர்கள் அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள்.



1. செல்வி.அங்கயர்க்கண்ணி செல்வராஜா - உப தலைவி, பழைய மாணவர் சங்கம் ஐக்கிய இராச்சியக் கிளை
2. திரு.மனோ ஶ்ரீதரன், தொழில் நீதிமன்ற நீதிபதி, மேலதிக நீதவான் - கொழும்பு
3. திரு.க.வே.மகாதேவன், சட்டத்தரணி, உப தலைவர், பழைய மாணவர் சங்கம் கொழும்புக் கிளை

எமது செயற்குழு உறுப்பினர், சமாதான நீதவான் திரு.க.சுந்தரமூர்த்தி அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்கள்.

10 ஏப்ரல் 2003 முன்னாள் ஆசிரியர்கள் திரு. திருமதி . சுந்தரராஜன் அவர்களைக் கௌரவிக்கும் தேநீர் விருந்து



நியூஸிலாந்தில் வதியும் எமது கல்லூரியின் பழைய மாணவியும், முன்னாள் ஆசிரியையுமாகிய திருமதி.தவமணி சுந்தரராஜன், அவரது கணவர் முன்னாள் ஆசிரியர் திரு. சுந்தரராஜன் இருவருக்கும் எமது செயற்குழுவினால் வெள்ளவத்தையில் அமைந்துள்ள "செட்டிநாடு" உணவகத்தில் ஒரு தேநீர் விருந்து அளித்து கௌரவிக்கப்பட்டனர்.

19 ஏப்ரல், 2003 - பழைய மாணவர்களின் சர்வதேச மாநாடு

எமது கல்லூரிஅதிபர்,ஆசிரியர்கள், வெளிநாட்டுக் கிளைகளின் பிரதிநிதிகள் மற்றும் பழைய




மாணவர்கள் கொழும்பு ஹொலிடேஇன் ஹோட்டலில் ஒன்றுகூடி கல்லூரி அபி விருத்திக்குத் தேவையான திட்டங்களை ஆராய்ந்து, விவாதித்து அவற்றை மேற் கொள்ளக் கூடிய தீர்மானங்களை அடையாளம் கண்டார்கள். இந்த மகா நாடு உலகெங்கும் இருக்கும் எமது பழைய மாணவர்களை ஒருங்கிணைக்க ஒரு தளமாக அமைந்தது. இந்த மாநாட் டில் பங்கு கொள்வதற்கு அவுஸ்தி ரேலியா, அமெரிக்கா, ஐக்கிய இராச் சியம், கனடா, ஹொங்கொங் ஆகிய இடங்களில் வதிகின்ற பழைய மாணவர்கள் வருகை தந்து சிறப்பித்தார்கள்.

08 ஜுன், 2003 - திரு.மனோ ஸ்ரீதரன் அவர்களின் புத்தக வெளியீடு



எமது பழையமாணவரும் தொழில் நியாயசபைத் தலைவரும், கொழும்பு மேலதிக நீதவானுமாகிய திரு.மனோ ஸ்ரீதரன் அவர்களின் படைப்புக்களான


1. இலங்கையில் தொழில் நியாய சபைகளின் ஏற்பாடு (சட்டம்)
2. குரும்பசிட்டியும் சட்டப் பாரம் பரியமும் (குரும்பசிட்டி சட்ட அறிஞர்கள் வரலாறு)

வெள்ளவத்தை தமிழ்ச் சங்க, சங்கரப் பிள்ளை மண்டபத்தில் வெளியிட ப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக உயர்நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு C.V. விக்னேஸ்வரன் அவர்களும், சிறப்பு விருந்தினராக முன்னாள் உயர்நீதி மன்ற நீதியரசர் மாண்புமிகு S.ஆனந்தகுமாரசுவாமி அவர்களும் கலந்து கொண்டது சிறப்பம்சமாக அமைந்தது. இந்த நிகழ்ச்சியில் பல கல்விமான்கள் ஆசியுரை, நூல் வெளியீட்டுரை வழங்கினார்கள்.

**29 ஜுன், 2003 - ஒன்பதாவது ஆண்டுப் பொதுக் கூட்டம்**


இந்த ஆண்டுப் பொதுக் கூட்டம் வெள்ளவத்தை உருத்திரா மாவத்தையில் அமைந்துள்ள தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம் பெற்றது. இந்த வைபவத்திற்கு 35 அங்கத்தினர் வருகை தந்து சிறப்பித்தனர்.

**03 ஆகஸ்ட், 2003 - பன்மொழிப் புலவர் த.கனகரத்தினம் அவர்களின் கவிதை நூல் வெளியீடு**



எமது பழைய மாணாக்கர் திரு.த.கனகரத்தினம் அவர்களது கவிதை நூல் வெளியீடு வெள்ளவத்தை, தமிழ்ச் சங்க மண்டபத்தில் பேராசிரியர் சோ.சந்திரசேகரம் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பல்வேறு சமுகங்களில் இருந்தும் கல்விமான்கள் பங்குபற்றி உரைகள் நிகழ்த்தியது ஒரு சிறப்பம்சமாக அமைந்தது.


**14 ஆகஸ்ட் 2003 - உலக பல்கலைக்கழக விளையாட்டு விழா 2003**




எமது கல்லூரியின் பழைய மாணவரும், யாழ் பல்கலைக்கழக கலைத்துறையில் 3ஆம் ஆண்டில் பயின்றுவருபவருமாகிய திரு.S.இரஞ்சித்குமார் கொரியாவில் (Korez) இடம் பெற்ற உலக பல்கலைக்கழக விளையாட்டு விழாவில் ஆகஸ்ட் 21 தொடக்கம் 31ம் திகதிவரை பங்குபற்றி எமது கல்லூரிக்குப் புகழ் தேடித் தந்தார். இவரது பிரயாணச் செலவுகளில் ஒரு பகுதியான ரூபா 100,000/- ஐ எமது வெளிநாட்டுக் கிளையினர் கொடுத்து உதவினார்கள். கனடா, ஐக்கிய இராச்சியம், சிட்னி, பாரிஸ் கிளையினர் தலா ரூபா 25,000/- நன்கொடையாக வழங்கி திரு.இரஞ்சித்குமாரின் பயணத்திற்கு உற்சாகமளித்தார்கள்.

**26 நவம்பர், 2003 - எமது தலைவரின் சிட்னி விஜயம்**

தலைவர் திரு. இ. கிருபானந்தன் அவர்கள் சிட்னிக்கு விஜயம் செய்த பொழுது, வைத்திய கலாநிதி. கேதீஸ்வரன் அவர்களின் இல்லத்தில் ஓர் இராப்போசன விருந்து அளிக்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டார். இந்த விருந்துபசாரம் அந்தக் கிளை செயற்குழுவினரால் ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது.




**06 டிசெம்பர் 2003 - ஐக்கிய இராச்சியக் கிளை தலைவர் திரு.வி.ஆர்.இராமநாதன் அவர்களின் இலங்கை விஜயம்**



எமது கிளையின் செயற்குழு அங்கத்தினர்கள் திரு.இராமநாதன் அவர்களால் ஒரு இராப்போசன விருந்திற்கு வெள்ளவத்தை "செட்டினாட்" உணவகத்திற்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அன்று கல்லூரியின் நிலவரம், புனரமைப்பு வேலைகள், வெளிநாட்டுக் கிளைகளின் பங்களிப்புக்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டன. அத்துடன் அவர் அவுஸ்திரேலியா சென்று திரும்பியதையும், அங்குள்ள கிளைச் செயற்குழுவினரைச் சந்தித்து கலந்துரையாடியமை பற்றியும் அறிவித்தார்.

06 ஜனவரி, 2004 - விக்டோரியா(ஆவுஸ்திரேலியா)கிளை தலைவர் திரு.S.விஜயகுமார் அவர்களுக்கு இராப்போசன விருந்து



திரு.விஜயகுமார் அவர்களுக்கும், அவரது பாரியாருக்கும் வெள்ளவத்தை "சண்முகா" உணவகத்தில் ஓர் இராப்போசன விருந்து, செயற்குழுவினரால் கொடுக்கப்பட்டது.

06 பெப்ரவரி, 2004 - எமது கல்லூரி விஜயம்



எமது செயற்குழுவின் பிரதிநிதிகள் திருவாளர்கள் கிருபானந்தன், த.பூ.முருகையா, பஞ்சநாதன், ரோஹிதன், பாலச்சந்திரன் ஆகியோர் கல்லூரிக்கு விஜயம் செய்து அதிபர், ஆசிரியர்களுடன் கலந்துரையாடி அவர்களது உடனடித் தேவைகளின் விபரங்களை அறிந்து கொண்டார்கள். இந்தச் சந்திப்பின் போது ஐக்கிய இராச்சியக் கிளையின் செயலாளர் திரு.நா.ஸ்ரீகெங்காதரன் அவர்களும் கலந்து கொண்டார். கல்லூரி அபிவிருத்தி வேலைகளுக்கு அதிபருக்கு உதவி செய்யக்கூடிய தொழில்நுட்ப வல்லுனர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைப்பதற்கான ஒரு தேவைபற்றி இந்த கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

# நிர்வாக சபை 2003/04

**போஷகர்கள்**
அதிபர்
திரு.த.பூ.முருகையா
திரு.இ.பாஸ்கரலிங்கம்
திருமதி.க.சின்னத்தம்பி
திரு.சி.சிவபாஸ்கரன்

**தலைவர்**
திரு.இ.கிருபானந்தன்

**உபதலைவர்கள்**
திரு.க.ஜெயராம்
திரு.க.வே.மகாதேவன்
திரு.மனோ ஸ்ரீதரன்
திரு.இ.பஞ்சநாதன்
திரு.சீ.பொ.திருஅருள்
திரு.ச.திருவாதவூரன்

**இணைச் செயளாலர்கள்**
திரு.இ.ரோஹிதன்
திரு.சி.ஸ்ரீலஜெயன்

**பொருளாளர்**
திரு.சி.ஜெயவர்மன்

**உதவிப்பொருளாளர்கள்**
திரு.வ.பாலச்சந்திரன்
திரு.சி.சிவஹரன்

**உறுப்பினர்கள்**
திரு.ஜெ.ஜெயகாந்தன்
திருமதி.பத்மினி சதானந்தன்
திரு.ந.காண்டீபன்
திரு.க.சுந்தரமூர்த்தி
திரு.இ.திருநாவுக்சரவு
திரு.சி.பத்மநாதன்
திரு.நா.தர்மநாதன்

**கௌரவக் கணக்காய்வாளர்**
திரு.இ.கைலேயநாதன்

# Jana Computer Technologists

## Colombo

Affiliated with

NICT COMPUTER EDUCATION

## National Institute of Computer Technology Bangalore

Special opportunity to Sri Lankans

**Available Courses**

- **Post Graduation Diploma in Computer Application (PGDCA)**
- **Diploma in Software Engineering (DSE)**
- **Diploma in Windows Applications (DWA)**
- **Diploma in Office Management (DOM)**
- **Diploma in Advanced Accountancy (DAA)**

Classes and Examinations are conducted in Colombo

**By**

**Jana Computer Technologists**

**385-1/1, Galle Road,**

**Colombo – 06.**

**T.P No. :-2554153**

Certificates are issued by

## National Institute of Computer Technology Bangalore.

MAHAJANA COLLEGE OLD STUDENTS' ASSOCIATION CANADA

தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி பழையமாணவர் சங்கம் கனடா

(A Registered Non Profit Organization)

*(Affiliated to City of Toronto)*


Patron
*E. Sivasothy*
416 515 0529

President
*T. Iswarah Kumar*
905 868 8128

Vice President
*A. Jogaratnam*
416 499 0731

Secretary
*P. Balasingam*
416 916 5262

Asst. Secretary
*R. Raveendran*
416 490 6477

Treasurer
*K. Pushparajah*
416 444 7142

Asst. Treasurer
*R.Satchithananthan*
416 439 8775

Committee Members
*Balaramani Srigunapalan*
*416 289 3255*
*V. Ranjan*
905 812 5354
*N. Jeganathan*
905 949 1669
*S. Selvaratnam*
416 266 2254
*P. Sukunendran*
905 821 4158
*K. Aravinthan*
416 754 1577
*A. Pathmanathan*
416 431 2731
*S.Skantharajah*
416 604 2522
*N.Ketheeswaran*
416 412 7709
*T.P.Sivananthamoorthy*
416 289 8821
*S.Sivapathasundaram*
905 896 0843


It gives me great pleasure to extend the best wishes of our Association on the occasion of your annual family get-together. We trust this function will act as a catalyst in bringing together all Mahajanans residing in Colombo, thus creating an awareness of the important role we are expected to play in rebuilding our school.

As you all may be aware, we successfully finished one of our larger endeavors under the Supervision of Mr.S.Ruthiralingam (old student & P.Eng -Civil) our Facilitator for Canada at a cost of one Million Ceylon Rupees to renovate, improve and furnish the building from the open-air stage to the hostel which gave us an additional eight classrooms and a well equipped sports room. In addition we contributed Rs. 25,000.00 for Mr.S.Ranjithkumar (old Student) to take part in the World University Games 2003 (one of the two participants selected from Jaffna Campus) held in Korea. Since 2001 when the college was reinstated we have been taking care of the full expenses towards the cost of our Founder's day Celebration held annually on June 24th at a cost of Canadian $1,000.00. Our current project is to give our students lab facilities immediately and we are in the process of purchasing all necessary lab equipment through our Colombo branch. In Addition we are also providing a laser printer and two fully trained teachers from Vanni Tech to teach Computer Science and Programming.

My personnel and special thanks from all Mahajanans living in Canada and in the United States of America to your President Mr.R.Kirupananthan for all the hard work, excellent coordination and a well done job in assisting the Canadian branch to fulfill all of the above projects in building MAHAJANA. This will greatly assist our present and future generations achieve their goals and dreams.

I am pleased to note the increased level of communication we have had with our Parent association in Colombo and the fellow associations in London, Paris and Australia in recent times. These exchanges have provided opportunities to learn about their aspirations and activities they have been involved in. Among the old students' associations around the globe it is very important and crucial to develop some common goals and streamline our efforts.

We also thank and congratulate the current Principal Mr. P.Suntheralingam his staff and Mr.S Ruthiralingam for their hard work under difficult circumstances. Our humble request to you Mr. Principal is to re-unite the Old Students' Association in Tellippalai. It is ours and every Mahajanans fervent hope and prayer that we would be rewarded with pleasing news of this long waited unity.

Let us also, on this occasion pay our tributes to our founder, the late Mr.T.A.Thuraiappappillai and his illustrious son, the late Mr.T.T.Jayaratnam, for building and bequeathing to us a great educational institution rich in Hindu Traditions and human values. Suffice to say, the secret of their success is to be found in these lines of great poet, Henry Wadsworth Longfellow,

The heights of great men reached and kept/Were not attained by sudden flight/ But thee, while their companions slept/ Were toiling upward in the nights.

Emulating the example of these two great men, there are Mahajanans who are Toiling hard in silence and in the night to build a great institution to great heights.
On behalf of the Mahajanans of Canada & U.S.A., I wish Mahajanas of Colombo

All the success and have an enjoyable day.

MAY GOD BLESS MAHAJANA

T.Iswarah Kumar

*With Best compliments*

*from*

# ROYAL HOSPITAL (PVT) LTD

*Care...... When and where you need it most*

No 62, W. A. SILVA MAWATHA, WELLAWATTE, COLOMBO 06,
Telephone : 2586581 / 2584212 / 2597565 Fax : +94(0)11-2597698
E-mail : manager @royalhospitals. Com

தெல்லிப்பழை
மகாஜனக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
ஐக்கிய இராச்சியம்

TELLIPPALAI
MAHAJANA COLLEGE
Old Students Association
United Kingdom

'Arivakam', 13 Arcus Road, Bromley, Kent BR1 4NN

# வாழ்த்துச் செய்தி

எமது கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினர் 18-4-2004 அன்று நடாத்துகின்ற ஒன்றுகூடல் நிகழ்விற்கு வாழ்த்துக் கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். நீண்ட அகதி வாழ்வின் பின்னர் மீண்டும் சொந்த மண்ணிற்கு திரும்பிச் சென்றுள்ள எமது மகாஜன அன்னைக்குத் தேவைகள் அதிகம். உலகம் முழுவதிலும் பரந்து வாழுகின்ற பழைய மாணவர்களாகிய நாம் இந்தத் தேவைகளைப் பூர்த்திசெய்வதன் மூலமே எமது நன்றியைச் சிறு அளவிலேனும் செலுத்த முடியும்.

2010ம் ஆண்டு எமது அன்னையின் நூற்றாண்டு வருகின்றது. இதனை மிகச் சிறந்த நினைவுச் சின்னத்தை நிறுவி நாம் கொண்டாடவேண்டும். ஆனால் இதற்கு முன்பாக, கல்லூரியை மீண்டும் வசதிகள் கொண்ட சிறப்புமிக்க பாடசாலையாக நாம் ஆக்க வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு எமது உதவியுடன் சென்ற ஆண்டு கொழும்பில் சர்வதேச மாநாடு ஒன்று உங்களால் வெற்றிகரமாக நடாத்தப்பட்டதை இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவுகூருகின்றேன். எமது கல்லூரியின் தேவைகள் அனைத்தையும் இனம்கண்டு, உலகம் முழுமையும் பரவிவாழும் மகாஜனன்களின் வளங்களை ஒருங்கிணைத்து இந்தப் பணியைச்செய்வதற்கு மாநாடு முனைந்தது.

மாநட்டின் தொடராக பெப்ரவரி மாதம் 5ம் திகதி கல்லூரியில் அதிபருடனும் பொறுப்பான ஆசிரியர்களுடனும் நடைபெற்ற சந்திப்பில் எமது சங்கத்தின் செயலாளரும் கலந்து கொண்டார். இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கமைய அதிபர் தலைமையிலான திட்ட நிறைவேற்றுக்குழுவிற்கு எல்லாப் பழைய மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகளாக — பழைய மாணவர்களான — தொழில்நுட்ப வல்லுனர்களை நியமிக்கும் பணிகள் பூர்த்தியாகும் செய்தியறிந்து மகிழ்கின்றேன். இந்தக்குழு பாடசாலையின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வண்ணம் செயற்பட பெரியபிரித்தானிய பழைய மாணவர்களான நாம் முழுமையாக ஒத்துளைப்பை வழங்குவதுடன் ஏனைய பழைய மாணவர் சங்கங்களுடன் சேர்ந்து ஒன்றுமையாகவும் செயற்படுவதில் உறுதியாக உள்ளோம்.

கல்லூரியின் உயர்வுக்கு பழைய மாணவர்கள் அனைவருடனும் பழைய மாணவர் சங்கங்கள் அனைத்துடனும் தொடர்பாளராகச் செயற்படும் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினரின் முயற்சிகள் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

வெல்லுக மாஜன மாதா!

வி.ஆர்.இராமநாதன்
தலைவர்
18-04-2004

*With Best compliments*

*from*

## Appolo Optician

Eye testing and dispensing

No. 317B, Galle Road, Wellawatte
Colombo 6
Tel : 4516609

## Appolo Pharmacy & Grocery

Your trusted neighbourhood pharmacist
for all your daily needs

No. 317C, Galle Road, Wellawatte
Colombo 6
Tel : 2505213

# MAHAJANANS OF VICTORIA (AUSTRALIA)

**Patrons**
Mr. A. Ramasamy
Mr. V. Thiyagarajah
Mr. S. Kanesalingam
Mrs. R. Ponnampalam
**President**
Mr. S.Vijeyakumar.
**Vice President**
Mrs. G. Loganathan
**Secretary**
Mr. C. Ranjan
**Assistant Secretary**
Mr. S.T. Sampanthar
**Treasurer**
Mr. T. Sriskantharajah
**Assistant Treasurer**
Mr.Rameswaralingam
**Committee Members**
Mrr. S. Mahalingam
Mr. S. Khathirkanthan
Mr. P. Rajendran
Mr. S. Karunakaran
**Sports Secretary**
Mr. T. Alagaratnam
**Coordinator**
Mrs. C.Naguleswaran

17 March 2004

Dear fellow Mahanajans and friends,

On behalf of Mahajanans of Victoria with great pleasure present this message for the Annual Family get-together 2004.

Congratulation on your successful Worl Conference of Mahajanans in 2003.

Recent improvement in communication among the Mahajanans Students Association around the world, will not only accountability, but also make the process of rebuilding our school easier.

We wish all Mahajanans and their families good health and happiness. Enjoy your annual family get-together.

Yours Sincerely

S. Vijeyakumar
President

**Address:** 19, Pine Crescent Aspendale, Victoria 3195 Australia; **E-mail:** ranshilla@aol.com
**Contact Numbers**: President - (03) 9889 8271; Secretary - (03) 9580 2813; Treasurer - (03) 9802 8281

*With Best compliments*

*from*

# LEELA EXPORTS & IMPORTS

MANUFACTURERS, ECPORTERS & IMPORTERS

**42,Bandarnayake Mawatha, colombo-12, Sri Lanka**
**Tel : 2423399,2440128 Fax : 94-1-2423414**
**E-mail : leelaexpo@lanka. ccom.lk**

**"GOLD AWARD WINNER"**
**National Chamber of Exporters Award 2000**

**MAHAJANA COLLEGE OLD STUDENTS ASSOCIATION**
**NSW and ACT (AUSTRALIA)**

மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்
சிட்னி (அவுஸ்திரேலியா)

**Patron**
Dr. A. Punniamoorthy

**President**
Mr. T. ManoharanVice

**President**
Mr T. Baheerathan
Mrs. P. Thillainadesan

**Secretary**
Dr. B. Vigneswaran

**Assistant Secretary**
Mr. S. Kumaran

**Treasurer**
Mr. A. Poopalasingam

**Assistant Treasurer**
Mr. S. Sabesan

**Members**
Mrs. M. Yogan
Mr. K. Raghavan
Dr Mrs. S. Ketheswaran
Mr. S. Ketharanathan
Mr. S. Thirunavukarasu

March 21, 2004

R. Kirupananthan
The President
Mahajana College Old Students' Association
No. 507 – 2/1, Galle Road
Colombo - 6
Sri Lanka

I am delighted in sending this message on the occasion of the annual family get together of Mahajanan community in Colombo on the 18th of April 2004. I wish you a successful and fulfilling event. I have no doubt that the gathering will open up further communication among the old students and Teachers. This will be beneficial to the participants as well as to the School itself.

The efforts and commitment you have shown over many years in maintaining the contacts among old students both in Sri Lanka & overseas are highly commendable. The Mahajanans all over the world are indebted to your association for encouraging and cultivating the interest of all parties in the affairs of our School.

On behalf of our association in NSW Australia I extend our heartiest congratulations to your organising committee for a job well done and wish you continued success in the future.

With best wishes to all old students and teachers of Mahajana College and their families.

Yours sincerely,

T. Manoharan
President

**Address:** 15, Rembrandt Street, Carlingford, NSW 2118 Australia; **E-mail:** tomahajanans@aol.com
**Contact Numbers**: President - (02) 8812 2310; Secretary - (02) 9834 5547; Treasurer - (02) 9649 1003

*With Best compliments*

*from*

**CAPITAL PARK LUXURY APARTMENTS**
**"RAMAPURAM" WELLAWATTE**

***Your Key to Perfect Life Style***

***Your Investment at Capital Park is 100% Risk Free***

PATHMA CONSTRUCTION (PVT) LTD

No . 4, Mile Post Avenue,
Colombo - 3

Tel : 94+11+2565391 - 4
Fax : 94+11+2565390

Website : www.pathmaconstruction.com
E-mail : ramapuram@sltnet.lk

# பழைய மாணவர் சங்கம், பாரிஸ்



## தலைவரின் ஆசியுரை

செல்வத்திற் சிறந்தது கல்வி.எமக்குக் கல்வியைத்தந்தது எமது கல்லூரி.

"கற்கக் கசடறக் கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக"

என்னும் பொய்யா மொழிக்கிணங்க தாம் பெற்றதை தமது அடுத்த சந்ததியும் பெற்றுய்ய வேண்டும் என்ற நன்நோக்கில் உலகமெல்லாம் செயற்படும் பழையமாணவர்களை எண்ணிப் பெருமிதம் கொள்ளாமல் இருக்கமுடியாது.

அந்த வகையில் கொழும்புக்கிளையினராகிய தங்களின் செயற் பாடுகளையும், உயர் நோக்கங்களையும் எண்ணி மகிழ்வடைகிறோம்.

பழையமாணவர்கள் குடும்பங்களாக இணைவதும் செயற்படுவதும் ஆரோக்கியமானதே.

தங்கள் பணிகள் சிறக்க, எங்கள் சகோதரத்துவமான வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பணிவன்புடன்

வரதன்

தலைவர்

30.03.2004

Association Des Anciens Du College Mahajana - Paris
3, Square Jodelet,
93420 Villepinte
France
Tel : +33 238672333
Fax: +33 238369635
E-mail: varatharajah.n@wanadoo.fr

*With Best compliments*

*from*

# Ceylinco Development Co Ltd.

No 566 Maradana Road,
Colombo -10

# "மீண்டும் தொடங்கும் மிடுக்கு"
# திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் அவர்களின் பணி

அந்த வருடம் மழையில்லை, பயிர்கள் வாடி அழிந்தன. அம்பனை வயலில் வேலை செய்யும் கமக்காரன் ஒருவன். அம்பனை வயல் மகாஜனவின் முன்புள்ள நிலம். கமக்காரன் சோர்ந்து விடவில்லை. அடுத்தவருடமும் வயலைக் கொத்தினான்; உழுதான். இது தான் அந்தக் கமக்காரனின் மிடுக்கு. இதைக் கவியாக வடித்தான் கவிஞன் மகாகவி, அக்கவிஞனும் ஒரு மகாஜனனே!

இருபது ஆண்டு போர்க்காலம். அது மக்களைக் குடிபெயர வைத்தது; புலம் பெயரவைத்தது மகாஜனக் கல்லூரியும் ஆட்டங்கண்டது. மாணாக்கர்கள் திசை தெரியாது ஓடினார்கள்; பிரிந்தார்கள். மருதனாமடத்தில் ஓலைக் கொட்டில்களில் கூடிக்கல்வி கற்றார்கள்.

கடந்த இரண்டு வருடங்களாக யுத்த நிறுத்தம் வந்தது. சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்தன. நாட்டில் ஓரளவு அமைதி. இந்த நேரத்தில் மகாஜனவின் பழைய கட்டடங்களில் மாணாக்கர் ஒன்று கூடினர். கல்விப்பாரம்பரியமும் தொடர்கிறது. இவற்றிற்கெல்லாம் அச்சாணியாக விளங்கிய பெரியார்தான் திரு.சு. ஸ்ரீபாஸ்கரன் செயற்கரும் செயலைச் செய்தபின் தான் அவர் மரணித்தார் (26-10-1999 இல்). அவரது பெருமைகளை நாடே போற்றும் போது-

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும்
தத்தம் கருமமே கட்டளைக் கல்"

என்ற தெய்வத் திருவள்ளுவரின் வாக்கு எவ்வளவு உண்மை என்பது விளங்குகின்றது.


மயிலிட்டி சுவாமிநாதன் அவர்களின் மகன் ஸ்ரீபாஸ்கரன் அவர்கள் ஒரு மகாஜனன். மகாஜனவில் கல்விகற்றவர். அவர் மகாஜன ஆசிரியர், அவர் ஒரு B.A (கலைமாணி) பட்டதாரி; அவர் 1956 ஆம் ஆண்டில் கல்கத்தாவில் B.A பட்டம் பெற்றார். அவர் பட்டதாரி ஆசிரியராக மகாஜனவில் சேர்ந்தார். சேர்ந்து கல்லூரி வளர்ச்சிக்காக அதிபர் ஜெயரத்தினம் அவர்களுடன் இணைந்து அரும்பாடுபட்டார்.

